அன்பு இந்திய உடன் குடிமக்களே,

**பொருள் : எங்கள் தொலை நோக்கு பார்வையையும், அணுகுதலையும் அங்கீகரிக்க, உங்களை வரவேற்க்கும் இந்தியாவின் ஒரே சுதந்திர கட்சி.**

நம் சுதந்திர போராட்ட வீரர்கள், இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்தார்கள். ஆனால், அவர்கள் இந்தியாவின் மாற்றத்தை கண்டு மிகவும் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள். நம் அரசாங்கம் உலகத்தின் மோசாமானதில் ஒன்று. எங்கு நோக்கினும், ஊழல், நீதியின்மை, பாதுகாப்பின்மை மற்றும் ஒழுக்கமின்மை. தினசரி வாழ்க்கை மிகவும் கடினமாக மாறியுள்ளது.

நமது அரசியல் கட்சிகள், தவறான வழியில் செல்வது தான், இதன் காரணமென்பது, இதை புரிந்து கொண்டவர்களுக்கு விளங்கும். தற்போதுள்ள அரசியல்வாதிகள், நல்ல ஆட்சி முறையின் கொள்கைகளை எல்லாம் உடைத்தெரிந்து விட்டார்கள். ஊழலுக்கு சலுகைகளை ஏற்படுத்தி விட்டார்கள். அதன் பலன், அமைப்பு முறையானது, தலைமையிலிருந்து ஊழாகிவிட்டது. இந்த முறையில் அடிப்படை சேவைகளைகூட வெளிப்படுத்த முடியாது.

இந்த செயல்பாட்டின் நிலையை, நம் அரசியலமைப்பு முறையை முழுவதுமாக பழுது பார்த்தால் மட்டுமே, மாற்ற முடியும். இந்த பழுது பார்த்தலுக்கு சில முக்கிய சட்ட திருத்தங்கள் தேவைப்படும். மாநில தேர்தல் நிதி, வாக்குகளின் அடிப்படையில் வழங்க, நல்ல நேர்மையான மக்கள் போட்டியிட, மற்றும் மூத்த நிர்வாக அதிகாரிகளின் உத்திரவாத பதவி காலம் நீக்க, சில அத்தியாவசிய மாற்றங்கள் தேவை. அரசாங்கம் முடிவுகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும். அரசாங்கம் வர்த்தகம் வியாபாரம் செய்வதை விட்டு, நல்லாட்சியில் கவனம் செலுத்த வேண்டும். நேரிய திட்டமுறை மாற்றங்களினால், செயல் அமைப்பு முறைகளிலும் மாற்றம் காண வேண்டும். ஸ்வர்ண பாரத கட்சியை அமைத்த, சம்பந்தப்பட்ட குடிமக்கள், மற்ற கட்சிகளிடம், இந்த சீர்திருத்தங்களை, செயல் படுத்த கோரினர். ஆனால் இந்த கட்சிகள் மறுத்துவிட்டன . உண்மை என்னவென்றால், மற்ற கட்சிகள், தாம் உண்டாக்கிய

ஊழல் அமைப்பில் இருந்து நேரிடையாக பயன் பெறுகின்றன. அவர்கள் ஏன் சீர்திருத்தங்களை நடைமுறை படுத்த வேண்டும்?

இந்தியாவின் ஒரே சுதந்திர கட்சியாக, ஸ்வர்ண பாரத கட்சி இருப்பதால், விடுதலை சித்தாந்தத்திற்க்கு, கடமைப்பட்டுள்ளது. இந்த சித்தாந்தம் மட்டுமே, இந்தியாவை, வாய்ப்புகளின் நிலமாகவும், செல்வமிக்க பொருளாதார நாடாகவும், திறந்த சமுதாயமாகவும் நிலைநாட்ட முடியும்.

ஸ்வர்ண பாரத கட்சி, இந்தியாவிற்க்கு, மூன்று அடிப்படை சீர்திருத்த வழிமுறைகளை அளிக்கிறது:

1. தேர்தல் அமைப்பு முறை மற்றும் அரசு நிர்வாகத்தை சீர்திருத்தம் செய்து, மொத்த ஒருங்கிணைப்பையும்,பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்தும்.
2. ஒரு அளவான, ஆனால் சக்திவாய்ந்த அரசாங்கம், தன் உட்கட்டமைப்பில் செயல்படும்.
3. அனைத்து குடிகளுக்கும் அதிகப்படியான சுதந்திரம், மற்றவர்களின் சுதந்திரத்திற்க்கும் பகுபாடின்மை.

நாங்கள் உலகத்தின் சிறந்த கொள்கை விளக்க அறிக்கைகளை அபிவிருத்தி செய்திருக்கிறோம். (http://swarnabharat.in/manifesto ) தயவு செய்து படித்து பார்த்து, கட்சியின் ஆழ்ந்த சிந்தனையுள்ள, பொது நல கொள்கையினை பாராட்ட வேண்டுகிறோம்.

உடனடி தேவையான சீர்திருத்தங்களை செய்ய கூடிய, திறமையான ஒரே கட்சி, ஸ்வர்ண பாரத கட்சி தான். இந்த வழியில், இந்தியா மீண்டும் ஒரு தங்க பறவையாக மாற முடியும்.

ஆண்டுக்கணக்கில் முன்னேற்பாடு செய்த பிறகு, இந்த கட்சி மக்களை சென்றடைகிறது. மஹாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா மாநிலங்களில், ஒரு சக்தி வாய்ந்த ஆரம்பம் நடந்தேறியுள்ளது. பிற மாநிலங்கள் பலவற்றிலும், முதல்நிலை கட்ட வேலைகள் இயங்கி கொண்டு இருக்கிறது.

எங்கள் 2015-16 ஆண்டு அறிக்கையானது, (http://swarnabharat.in/annualreports ) எங்கள் சமீப கால நடவடிக்கைகள், எண்ணற்ற புகைப்படங்கள் மற்றும் பத்திரிக்கை துண்டுகள் அடங்கிய விளக்கங்களை அளிக்கும்.

இந்த கட்சி மட்டும் தான், நீங்கள் விரும்பும் தூரம் வரை செல்ல முடியும். நீங்கள் முன்னோக்கி வந்து, உதவி செய்து, இந்தியாவை வல்லரசாக்குவது, உங்கள் கையில் உள்ளது. ஆனால் தயவு செய்து முதலில், நீங்கள் கட்சியின் அறிமுக சான்றுகளையும், திறமைகளையும் பற்றி திருப்தி கொள்ளுங்கள். நாங்கள் கொண்டுள்ள யு-ட்யூப் அலைவரிசையில், எங்களின் ஆரம்ப நிலை கட்சி தலைவர்களின் செய்திகளை கேட்கலாம்.

எங்களின் தொலை நோக்கு பார்வை மற்றும் அணுகுமுறையில் நம்பிக்கை இருந்தால், தயவு செய்து ஸ்வர்ண பாரத கட்சியில் உறுப்பினராகி, இக்கட்சியை பலமாக வேரூன்ற உதவுங்கள்.

**நீங்கள் உறுப்பினர் ஆவதர்க்கு,** இணையதளத்தில் (http://swarnabharat.in//register ) என்ற குறியிடத்தில் சென்று பார்க்கலாம். ஆயுள் கால சந்தா தொகை தற்போது ரூ. 100/- மட்டும்.

**தொண்டர்கள் ஆவதர்க்கு**
(http://swarnabharat.in/register-volunteer ) என்ற குறியிடத்தில் சென்று பார்க்கலாம்.

தாராளமாக நன்கொடை கொடுத்து உதவுங்கள். குறைந்த தொகைகளில், மாத தவணைகளும் வரவேற்க்கப்படுகின்றன. இணையதளத்திலும் (http://swarnabharat.in/credit-cards-neft) சென்று செலுத்தலாம்.
காசோலைகள் Payable to <u>" Swarna Bharat Party "</u>
மூலமாகவும் செலுத்தலாம். விலாசம்: Swarna Bharat Party, Registered Office, G- 249, Palam Vihar,
Gurgaon-122017
வெளிநாட்டில் வசிப்பவர்கள் உட்பட, இந்திய குடிமக்கள் மட்டுமே, நன்கொடை வழங்க முடியும்.
நன்கொடைகள் (u/s 80GGC of the Income Tax Act) வரிவிலக்குக்கு உட்பட்டவை.

இறுதியாக, மறுபடி ஒருமுறை, நான் இந்த கட்சி பற்றியும், அதன் தொலை நோக்கு பற்றியும், உங்களிடம் கையளிக்கிறேன். இந்தியாவை வல்லரசாக்க, நான் உங்களை இந்த கட்சியில் இணைய அழைக்கிறேன் அல்லது இந்த அடித்தளத்திற்க்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். எல்லோரும் இணைந்தால், நாம் இந்தியாவின் கனவை, நனவாக்க முடியும். தயவு செய்து, இந்தக் கடிதத்தை, உங்கள் நண்பர்களிடமும், சமூகத்தினரோடும், பரவலாக பகிர்ந்து கொள்ளுங்கள்.

வாழ்த்துக்களுடன்,
சன்ஜெய் சோனாவானி,
தலைவர்,
ஸ்வர்ண பாரத கட்சி.
( info@swarnabharat.in )